T.C.146

060/DM/19

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS

# DEPARTMENTAL TEST FOR APPOINTMENT AS ASSISTANT AUDIT OFFICERS IN THE AUDIT WING OF THE HINDU RELIGIOUS AND CHARITABLE ENDOWMENTS (ADMN.) DEPARTMENT – PART - II (b) ACCOUNTS AND AUDIT OF TIRUPPANI WORKS FOR RELIGIOUS INSTITUTIONS AND GENERAL ACCOUNTS OF GOVERNMENT OF TAMIL NADU (THEORY AND PRACTICAL)

(Without Books)

Maximum Time : 2 hours Maximum Marks : 80

## *IMPORTANT INSTRUCTIONS*

## OBJECTIVE TYPE

கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**
வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

**NB : Words of masculine gender in these instructions shall, where the context so require, be taken to include feminine gender.**
இந்த அறிவுறுத்தலில் ஆண் பாலினரின் வார்த்தைகளில், சூழலுக்கேற்ப தேவைப்படின் பெண் பாலினரின் வார்த்தைகளும் அடங்கும்.

**This booklet should not be opened till the Invigilator gives a signal to open it. As soon as the signal is received you should open the booklet and then proceed to answer the questions.**
இந்த வினாத்தொகுப்பினை கண்காணிப்பாளரின் அனுமதி பெறுவதற்கு முன்னர் திறக்ககூடாது. கண்காணிப்பாளர் வினாத்தொகுப்பினை திறப்பதற்கு அனுமதி அளித்தவுடன் வினாத்தொகுப்பினை திறந்து விடையளிக்க தொடங்கலாம்.

1. This question booklet contains 80 number of objective type questions. Prior to attempting to answer, the candidate is requested to check whether all questions are there and ensure that there are no blank pages in the question booklet. In case, if any defect is noticed in the question paper, it shall be reported to the Invigilator immediately, **within first 10 minutes** after which no request will be entertained.
இவ்வினாத்தாள் 80 கொள்குறி வகை வினாக்களை கொண்டது. விண்ணப்பதாரர்கள் விடையளிக்க தொடங்கும் முன், வினாத்தாளில் எல்லா வினாக்களும் இடம் பெற்றுள்ளனவா என்பதையும், ஏதேனும் சில பக்கங்கள் / வினாக்கள் அச்சிடப்படாமல் விடுபட்டுள்ளனவா என்பதையும் சரிபார்த்துக் கொள்ளவும். வினாத்தாளில் ஏதேனும் குறை இருப்பின் வினாத்தாளைப் பெற்ற பின் பத்து நிமிடங்களுக்குள் அறை கண்காணிப்பாளரிடம் தெரிவிக்க வேண்டும். அதற்கு பிறகு தெரிவிக்கப்படும் கோரிக்கைகள் ஏதும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

2. Answers all questions. All questions carry equal marks.
அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். அனைத்து வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.

[Turn over

3. Candidate must write his Register Number in the space provided on the top right side of this booklet alone. Do not write anything else on the Question Booklet.
விண்ணப்பதாரரின் பதிவெண்ணை இவ்வினாத்தாளின் மேல் வலது பக்கத்தில் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுத வேண்டும். வினாத்தாளில் வேறு எதையும் எழுதக் கூடாது.

4. The sheet before the last page of the question booklet shall be used for any rough work.
வினாத்தாளின் கடைசி பக்கத்திற்கு முன் பக்கத்தில் rough work எழுதி பார்க்க உபயோகித்துக் கொள்ளவும்.

5. (a) Each question comprises of four responses i.e. (A), (B), (C) and (D). Candidate shall select only one correct response. In case, if the candidate feels that there are more than one correct response, **shade the response which he considers is the best.**
(b) In any case, a candidate shall choose only one response for each question.
(c) **If more than one answer is shaded for a question, the answer will be treated as wrong and no mark will be given for that question.**
(d) The total marks will depend on the total number of correct responses marked in the OMR answer sheet. (For this purpose, only one shaded circle for a question will be taken into account for awarding mark)

(a) ஒவ்வொரு வினாவிற்கும் (A), (B), (C), (D) என நான்கு விடைகள் கொடுக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர் அவற்றில் ஏதேனும் ஒரு சரியான விடையைத் தேர்வு செய்ய வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு வினாவிற்கு இருப்பதாக கருதினால், **அவற்றில் எவ்விடை மிகச் சரியானது என கருதுகிறீர்களோ, அவ்விடையை நிழலிட்டு காட்ட வேண்டும்.**
(b) எவ்வாறிருப்பினும், ஒரு வினாவிற்கு ஒரே ஒரு விடையைத் தான் தேர்ந்தெடுக்க வேண்டும்.
(c) **ஒரு வினாவிற்கு ஒன்றுக்கு மேற்பட்ட வட்டங்களில் விடையளிக்கப்பட்டிருந்தால் அவ்விடை தவறானதாக கருதப்பட்டு, அவ்வினாவிற்கு மதிப்பெண் வழங்கப்படமாட்டாது.**
(d) OMR விடைத் தாளில் குறிக்கப்பட்ட சரியான விடைகளைப் பொறுத்து, மொத்த மதிப்பெண்கள் வழங்கப்படும் (ஒரு வினாவிற்கு ஒரு வட்டத்தில் (குறிப்பிட்ட) நிழலிட்ட விடை மட்டுமே மதிப்பெண் வழங்க கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்).

6. Do not mark the answers in the Question Booklet.
வினாத்தாளில் விடைகளைக் குறிப்பிடக் கூடாது.

7. Candidate shall not remove or tear off any sheet from this question booklet. During the examination he is not allowed to take the question booklet out of the examination hall. Only after the examination is over, he shall be allowed to take the question booklet.
விண்ணப்பதாரர், வினாத்தாளின் எந்த ஒரு பக்கத்தையும், நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நடைபெறும் போது, வினாத்தாளை தேர்வு கூடத்தைவிட்டு வெளியே எடுத்து செல்ல அனுமதி கிடையாது. தேர்வு முடிந்த பின்னரே வினாத்தாளை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

8. Failure to comply with any of the above instructions will render you liable to such action or penalty as the Commission may decide.
மேற்கண்ட அறிவுரைகளில் ஏதேனும் மீறப்படுமேயானால் தேர்வாணையம் எடுக்கும் தண்டனை / நடவடிக்கைக்கு உள்ளாக நேரிடும்.

9. In case of doubt, English version is the final.
வினாக்களில் சந்தேகமிருப்பின், ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

1. In a construction work, Iron rods are measured in units of

(A) Numbers (B) Kilogram

(C) Metre (D) Square Metre

கட்டுமான பணிகளின் போது இரும்பு கம்பிகளின் அளவீடு கணக்கிடப்படும் முறை

(A) எண்ணிக்கைகளில் (B) கிலோ கிராம்

(C) மீட்டர் (D) சதுர மீட்டர்

2. Which of the below mentioned is not a contact system?

(A) Lumpsum contract (B) Piece work contract

(C) Item rate contract (D) Advance contract

பின் குறிப்பிட்டுள்ளவற்றில் எது ஒப்பந்த முறை அல்ல

(A) ஒட்டுமொத்த ஒப்பந்த முறை (B) துண்டு ஒப்பந்த முறை

(C) ஷெட்யூல் ஒப்பந்த முறை (D) முன்பண ஒப்பந்த முறை

3. The percentage of the Estimate amount to be paid to Tamil Nadu Labour Welfare Fund

(A) 0.3% (B) 0.7%

(C) 1% (D) 2.5%

தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நிதிக்கு வேலையின் மதிப்பீட்டில் செலுத்தப்படவேண்டிய விழுக்காடு

(A) 0.3% (B) 0.7%

(C) 1% (D) 2.5%

4. The Standard Data Book required for works is being prepared by _______ Department.

(A) HR and CE (B) Statistics

(C) Public Works (D) Finance

வேலைகளுக்கு தேவையான பொருட்களை கணக்கிடப்படும் நிலையான கணக்கீட்டு புத்தகம் ____________ துறையால் தயாரிக்கப்படுகிறது.

(A) அறநிலைய (B) புள்ளியல்

(C) பொதுப்பணி (D) நிதி

5. A period of tender notice for value of works up to 2 Crores

(A) 7 days (B) 15 days

(C) 21 days (D) 30 days

ரூ. 2 கோடி வரையிலான ஒப்பந்த புள்ளிகளுக்கு அளிக்கப்படும் கால அவகாசம்

(A) 7 நாட்கள் (B) 15 நாட்கள்

(C) 21 நாட்கள் (D) 30 நாட்கள்

6 Tenders being invited as per rules and regulations of Tamil Nadu

(A) Transparency in tender Act 42 / 1998

(B) Transparency in tender Act 43 / 1998

(C) Transparency in tender Act 44 / 1998

(D) Transparency in tender Act 45 / 1998

ஒப்பந்தபுள்ளி வரவேற்பு நடைமுறைகள் கீழ்கண்ட தமிழ்நாடு சட்ட விதிகளின்படி நடைமுறைப்படுத்தப்படுகிறது

(A) ஒளிவு மறைவற்ற ஒப்பந்தச் சட்டம் 42 / 1998

(B) ஒளிவு மறைவற்ற ஒப்பந்தச் சட்டம் 43 / 1998

(C) ஒளிவு மறைவற்ற ஒப்பந்தச் சட்டம் 44 / 1998

(D) ஒளிவு மறைவற்ற ஒப்பந்தச் சட்டம் 45 / 1998

7. Piece Workers are used for

(A) Digging purposes
(B) Unforeseen works
(C) Miscellaneous services
(D) Security purposes

சில்லரை வேலையாள் என்பவர்

(A) வானம் தோண்டுதற்கு பயன்படுத்துதல்
(B) எதிர்பாராத வேலைகளை முடிப்பதற்காக
(C) சில்லரை பணிகளுக்காக
(D) காவல் பணிகளுக்காக

8. Earnest money Deposit for unsuccessful contractors to be refunded

(A) Cannot be refunded

(B) As per requisition of the contractor

(C) Within 2 months from the date of receipt of EMD

(D) Subject to audit

ஒப்பந்தப் புள்ளியில் தேர்வு பெறாத ஒப்பந்தக்காரர்களின் பணபிணைவைப்புத் தொகை திரும்ப வழங்குதல்

(A) வழங்க இயலாது

(B) ஒப்பந்தகாரரின் ஒப்புதல் கடிதம் பெற உடன்

(C) பணபிணை வைப்புத்தொகை பெறப்பட்ட இரண்டு மாதத்திற்குள்

(D) தணிக்கை முடிவுற்ற பிறகு

9. Comparative statement means

(A) Comparison of works
(B) Comparison of contractors
(C) Comparison of tender received
(D) Comparison of materials supplied

ஒப்பு நோக்கு படிவம்

(A) வேலைகளை ஒப்பிடுதல்
(B) ஒப்பந்தகாரர்களை ஒப்பிடுதல்
(C) பெறப்பட்ட ஒப்பந்தங்களை ஒப்பிடுதல்
(D) பெறப்பட்ட பொருட்களை ஒப்பிடுதல்

10. The assistant commissioner's limit for the non- listed temples

(A) Rs. 10,000 (B) Rs. 25,000

(C) Rs. 25,000 – 2 Lakhs (D) 2.5 Lakhs

பட்டியலில் சேராத ஆலய வேலைகளுக்கான மதிப்பீட்டில் உதவி ஆணையரின் வரம்பு

(A) Rs. 10,000 (B) Rs. 25,000

(C) Rs. 25,000 முதல் 2 இலட்சம் வரை (D) 2.5 இலட்சம்

11. Agreement Bond is a written bond between

(A) Contractor and labours

(B) Executive Officer and Higher Authority of the Department

(C) Contractor and Executive Officer

(D) Donor and Contractor

ஒப்பந்தப்பத்திரம் என்பது ———————— இடையேயான எழுத்து மூலமான பத்திரம்.

(A) ஒப்பந்தகாரர்களுக்கும் வேலை செய்பவர்களுக்கும்

(B) செயல் அலுவலருக்கும் துறை உயர் அலுவலர்களுக்கும்

(C) ஒப்பந்தகாரருக்கும் செயல் அலுவலருக்கும்

(D) ஒப்பந்தகாரருக்கும் உபயதாரருக்கும்

12. Measurement and measurement book

(A) Checking of plans and Estimates

(B) Verification of the value in the plan and estimate

(C) Measurement the work done by the contractor in length, width and recording its value in a separate book

(D) Supervising and recording the work

அளவீடு மற்றும் அளவீடு புத்தகம்

(A) வரைபடம், திட்ட மதிப்பீட்டினை சரிபார்த்தல்

(B) திட்ட மதிப்பீட்டில் உள்ள மதிப்பை சரிபார்த்தல்

(C) ஒப்பந்தகாரரால் செய்யப்பட்ட வேலையை நீளம், அகலம், உயரம் அடிப்படையில் அளந்து அதனை தனி புத்தகத்தில் பதிவு செய்தல்

(D) நடைபெறும் வேலையை மேற்பார்வை செய்து பதிவு செய்தல்

13. The mode of payment for works

(A) Cash (B) Cheque

(C) Fund Transfer (D) As preferred by contractor

வேலைக்கான தொகை பட்டுவாட செய்யும் முறை

(A) ரொக்கம் (B) காசோலை

(C) ஒப்பந்தகாரர் கணக்கிற்கு பணமாற்றம் (D) ஒப்பந்தகாரர் விரும்பிய வகையில்

14. The stock entries of the printed Thiruppani donation tickets are made in

(A) Form No. 22
(B) Form No. 23
(C) Form No .24
(D) Thiruppani Stock Register

அச்சிடப்பட்ட திருப்பணி நன்கொடை இரசீதுகள் எதில் வரவு வைக்கப்படவேண்டும்?

(A) படிவம் எண் 22
(B) படிவம் எண் 23
(C) படிவம் எண் 24
(D) திருப்பணி இருப்புப் பதிவேடு

15. What do you mean by 'Scrap'?

(A) The damaged part of the construction
(B) Polishing of the building
(C) The left over iron rod pieces
(D) Material used for construction

கழிவுத் துணுக்கு என்பதன் பொருள் யாது?

(A) கட்டப்பட்ட கட்டிடத்தின் உடைந்த பகுதி
(B) கட்டிடம் பளிச்சென்று ஆக்குதல்
(C) பயன்படுத்திய இரும்புக்கம்பிகளின் துண்டுகள்
(D) கட்டுமானத்திற்கு பயன்படுத்தி பொருளின் பெயர்

16. Form No. 89 deals with

(A) Comparative statement
(B) Revised statement
(C) Works slips
(D) Sanctioning additional funds

படிவம் எண் 89 என்பது

(A) ஒப்புநோக்கு பட்டியல்
(B) திருத்திய மதிப்பீட்டு அறிக்கை
(C) வேலைச்சீட்டு
(D) கூடுதல் தொகைக்கான அனுமதி

17. Can the road used for temple car procession be renovated Thiruppani Committee?

(A) Can be renovated with proper approval and estimate
(B) This work should be undertaken by Highways Department
(C) This work should be undertaken by Local Bodies Department
(D) Can be renovated with Public donations

தேரோடும் வீதிகளை திருப்பணிக்குழுவினர் புதுப்பிக்கலாமா?

(A) உரிய அனுமதி மற்றும் மதிப்பீட்டுடன் புதுப்பிக்கலாம்
(B) நெடுஞ்சாலைத்துறையால் இப்பணி மேற்கொள்ளப்படவேண்டும்
(C) உள்ளாட்சி அமைப்பினால் இப்பணி மேற்கொள்ளப்படவேண்டும்
(D) பொதுமக்கள் நன்கொடை மூலம் புதுப்பிக்கலாம்

18. Plinth area means

(A) Total area in square feet mentioned in estimate

(B) Area dug for Foundation purpose

(C) The total outer usage area after completion of work

(D) Total area of the compound wall

பிளிந்த் பகுதி என்பது யாது?

(A) மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள மொத்த சதுர அடி

(B) அடித்தளம் அமைக்க வானம் தோண்டியது

(C) பூமிக்கு மேலே கட்டப்பட்ட கட்டிடத்தின் வெளிப்புற அளவின் மொத்த பரப்பளவு

(D) மதில் சுவர் கட்டுவதற்கான மொத்த இடம்

19. The weight of 1 metre length MS Iron rod of 25 mm diameter is

(A) 2.470 metre (B) 3.853 metre

(C) 4.150 metre (D) 4.158 metre

25 மி.மீ. விட்டம் கொண்ட ஒரு மீட்டர் எம்.எஸ். இரும்பு கம்பியின் எடை

(A) 2.470 மீட்டர் (B) 3.853 மீட்டர்

(C) 4.150 மீட்டர் (D) 4.158 மீட்டர்

20. Selection of contractors

(A) From Contractor's union

(B) As specified the Commissioner

(C) Person from the panel approved by PWD Dept.

(D) Income Tax Payer

ஒப்பந்தக்காரர் தேர்வு

(A) ஒப்பந்தக்காரர்கள் சங்கத்திலிருந்து

(B) ஆணையரால் பரிந்துரைக்கப்படுவர்

(C) பொதுப்பணித்துறையில் ஒப்பளிக்கப்பட்ட பட்டியலில் உள்ள நபர்

(D) வருமான வரி செலுத்துபவர்

21. Lased Deposit means

(A) Deposit received from unsuccessful contractors

(B) A kind of deposit for construction

(C) Unclaimed deposit for 3 years

(D) Deposit remitted in the treasury

காலாவதியான வைப்புத் தொகை என்பது

(A) தேர்வாகாத ஒப்பந்தகாரர்களிடம் பெறப்பட்ட வைப்புத்தொகை

(B) கட்டுமான பணிக்கான ஒரு வகை வைப்புத்தொகை

(C) மூன்று ஆண்டுகளுக்கு மேல் கோரப்படாத வைப்புத்தொகை

(D) கருவூலத்தில் செலுத்தப்பட்ட வைப்புத்தொகை

22. An estimate prepared for the construction of a temple office room for Rs. 5,99,000.00 is to be approved by the

(A) Commissioner
(B) Joint Commissioner
(C) Deputy Commissioner
(D) Assistant Commissioner

ரூ. 5,99,000.00 க்கான திருக்கோவில் அலுவலக அறை கட்டுமான மதிப்பீட்டினை அங்கீகரிக்கும் அதிகாரம் உடையவர்

(A) ஆணையர்
(B) இணை ஆணையர்
(C) துணை ஆணையர்
(D) உதவி ஆணையர்

23. Three is no need to prepare a revised estimate if the tender rate is _____ than the estimate.

(A) Above 5%
(B) Below 5%
(C) Above 10%
(D) Above 12%

மதிப்பீடு தொகையில் ————— மாற்றங்கள் இருப்பின் திருந்திய மதிப்பீடு தயாரிக்க வேண்டியதில்லை.

(A) 5% க்கு மேல்
(B) 5% க்கு கீழ்
(C) 10% க்கு மேல்
(D) 12% க்கு மேல்

24. Who cannot make entries in a measurement Book?

(A) Assistant Divisional Officer
(B) Assistant Engineer
(C) Contractor
(D) Junior Engineer

அளவீடு புத்தகத்தில் பதிவுகளை மேற்கொள்ளக்கூடாதவர்

(A) உதவி கோட்ட பொறியாளர்
(B) உதவி பொறியாளர்
(C) ஒப்பந்தகாரர்
(D) இளநிலை பொறியாளர்

25. Which of the following registers to be scrutinised during the course of audit?

(A) Contractor Ledger
(B) Tender Register
(C) Register of Contractor
(D) All the above

கட்டுமான பணிகளுக்கான தணிக்கையின் போது சரிபார்க்கப்படவேண்டிய பதிவேடுகள் எவை?

(A) ஒப்பந்தகாரர்கள் பேரேடு
(B) ஒப்பந்தப்புள்ளி பதிவேடு
(C) ஒப்பந்தகாரர் விபரப்பதிவேடு
(D) இவை அனைத்தும்

26. Which of the following works does not require measurement before commencement?

(A) Well work excavation
(B) Demolition of old buildings
(C) RCC columns
(D) Destruction of Shrubs/ bushes

கீழ்கண்ட வேலைகளில் எதற்கு முன் அளவு செய்ய வேண்டியதில்லை

(A) கிணறு தோண்டுதல்
(B) பழைய கட்டிடம் இடித்தல்
(C) கான்கிரீட் தூண்
(D) புதர்காடு அழித்தல்

27. The deduction that cannot be made from a work bill is ___

(A) Income tax (B) Sales tax

(C) Wealth tax (D) Security tax

வேலைக்கான பட்டியலில் இருந்து கீழ்கண்டவற்றில் எதை பிடித்தம் செய்ய இயலாது?

(A) வருமான வரி (B) விற்பனை வரி

(C) சொத்து வரி (D) பாதுகாப்பு வைப்பு

28. The rate income tax to be deducted from an individual contractor

(A) 1% (B) 2%

(C) 3% (D) 5%

தனிநபர் ஒப்பந்தகாரரிடமிருந்து பிடித்தம் செய்யவேண்டிய வருமான வரி விழுக்காடு

(A) 1% (B) 2%

(C) 3% (D) 5%

29. One feet is

(A) 0.3048 m (B) 0.3480 m

(C) 0.3840 m (D) 0.3408 m

ஒரு அடி என்பது

(A) 0.3048 மீட்டர் (B) 0.3480 மீட்டர்

(C) 0.3840 மீட்டர் (D) 0.3408 மீட்டர்

30. The Joint Commissioner / Executive officer of a temple gave administrative sanction for a donor work of estimate Rs. 5.10 Lakh. The action of the Joint commissioner / Executive Officer is

(A) Correct (B) Incorrect

(C) Need Commissioner's approval (D) No approval needed

ஒரு திருக்கோவிலின் இணை ஆணையர்/செயல் அலுவலர் நன்கொடையாளரால் செய்யக்கூடிய ரூ. 5.10 இலட்சத்திற்கான வேலையின் மதிப்பீட்டினை ஒப்புதல் அளித்துள்ளார். இக்கூற்று

(A) சரி (B) தவறு

(C) ஆணையரின் ஒப்புதல் தேவை (D) ஒப்புதல் தேவையில்லை

31. Thiruppani works are defined under

(A) A separate Act of HR & CE

(B) Construction of New temple

(C) No such Act

(D) Section 116 of HR & CE Act

திருப்பணி வேலைகள் இத்தலைப்பில் விவரிக்கப்பட்டுள்ளது

(A) இந்து சமய அறநிலையத்துறை தனி சட்டம்

(B) புதிய ஆலயம் கட்டுதல்

(C) எந்த சட்டமும் இல்லை

(D) இந்து சமய அறநிலையத்துறை சட்டப்பிரிவு 116

32. Thirppani accounts for Thiruppani works are maintained

(A) With General Accounts

(B) As a Separate Account

(C) By the office of the Assistant Commissioner

(D) By the Contractor

திருப்பணி வேலைகளுக்கான திருப்பணி கணக்குகள் பராமரிக்கப்படுதல்

(A) திருக்கோவில் பொது கணக்கில்

(B) தனிக்கணக்காக பராமரித்தல்

(C) உதவி ஆணையர் அலுவலகத்தில்

(D) ஒப்பந்தகாரரால்

33. Plan and Estimate means

(A) Planning and construction

(B) A diagram for construction and the estimation of amount approximately

(C) Amount sanctioned by the Commissioner

(D) Fixation by the Thiruppani Committee

வரைபடம் மற்றும் மதிப்பீடு என்பது

(A) கட்டிடம் கட்ட திட்டமிடல்

(B) வரைபடமும் தோராயமான மதிப்பீடும்

(C) ஆணையரால் அனுமதிக்கப்பட்ட தொகை

(D) திருப்பணி குழுவால் நிர்ணயிப்பது

34. The Accounting period of the Thiruppani Accounts

(A) Fasli year

(B) Financial year

(C) From commencement to Completion of work

(D) Fixed by Commissioner

திருப்பணி கணக்குகள் பேணப்படவேண்டிய காலம்

(A) பசலி ஆண்டு

(B) நிதியாண்டு

(C) வேலை துவக்கம் முதல் முடிவு வரை

(D) ஆணையரின் முடிவுப்படி

35. Annual Report means

(A) Reports about accounts maintained in the temple

(B) Complete Report about Administration

(C) Report to be prepared by Executive Officer/ Trustee about the maintenance of immovable properties for every Fasli year

(D) An Audit Report

ஆண்டு அறிக்கை என்பது

(A) திருக்கோவில் கணக்குகள் குறித்த அறிக்கை

(B) நிர்வாகத்தின் முழு அறிக்கை

(C) செயல் அலுவலர் / அறங்காவலரால் ஒவ்வொரு பசலியிலும் அசையாச் சொத்துக்களின் பராமரிப்பு பற்றிய அறிக்கை

(D) ஒரு தணிக்கை அறிக்கை

36. Construction or Renovation of Gopuram, Kalasam and Vimaanams are to be done by

(A) an experienced mason
(B) a Contractor
(C) a Sthapathy
(D) an Engineer

கோபுரம், கலசம் மற்றும் விமானம் இவற்றை கட்டுதலும், புதுப்பித்தலும் யாரால்?

(A) அனுபவம் வாய்ந்த கொத்தனார்
(B) ஒரு ஒப்பந்தகாரரால்
(C) ஒரு ஸ்தபதியால்
(D) ஒரு பொறியாளரால்

37. Tenders mean

(A) Calling of contractors

(B) Preparation of plan and estimate

(C) Calling for the suppliers of materials

(D) Publishing of plans and estimate

ஒப்பந்த புள்ளிகள்

(A) ஒப்பந்தகாரர்களை அழைத்தல்

(B) திட்டம் மற்றும் மதிப்பீடு தயாரித்தல்

(C) வேலைக்கான பொருட்களை வழங்குபவர்களை அழைத்தல்.

(D) திட்டம் மற்றும் மதிப்பீடு விபரங்களை வெளியிடுதல்

38. Security deposit collected from the successful contractor shall be refunded

(A) After completion of work (B) After 3 months of completion

(C) After 6 months of completion (D) After completion of Audit

வெற்றிகரமான ஒப்பந்தகாரரிடமிருந்து பிடித்தம் செய்யப்பட்ட பாதுகாப்பு பிணை வைப்புத்தொகை திருப்பவேண்டிய காலம்

(A) வேலை முடிந்த உடன் (B) மூன்று மாதங்கள் கழித்து

(C) ஆறு மாதங்கள் கழித்து (D) தணிக்கை முடிவுற்றவுடன்

39. The rate of penalty per month for failure on the part of the contractor to employ diploma holder technical assistant is Rs.

(A) 1000.00 (B) 2000.00

(C) 5000.00 (D) 7500.00

ஒப்பந்தகாரரால் கட்டிடப் பொறியாளருக்கான பட்டயப்படிப்பு (DCE) முடித்த தொழில்நுட்ப உதவியாளரை நியமிக்கத் தவறும் பட்சத்தில், வசூலிக்கப்படவேண்டிய தண்டத்தொகை மாதத்திற்கு ருபாய்

(A) 1000.00 (B) 2000.00

(C) 5000.00 (D) 7500.00

40. The minimum qualification required for technical assistant for works between Rs. 1-5 lakhs

(A) Any Bachelor Degree

(B) Any Master Degree

(C) Diploma in Civil Engineering

(D) B.E. in Civil Engineering

ரூ. ஒன்று முதல் ஐந்து இலட்சம் வரையிலான பணிகளுக்கு நியமிக்கப்படும் தொழில்நுட்ப உதவியாளரின் குறைந்த பட்ச கல்வித் தகுதி

(A) ஏதாவது ஒரு இளங்கலைப் பட்டம்

(B) ஏதாவது ஒரு முதுகலைப் பட்டம்

(C) கட்டிட பொறியாளருக்கான பட்டயபடிப்பு (DCE)

(D) கட்டிட பொறியாளருக்கான இளங்கலைப்படிப்பு B.E. (CE)

41. The weight of 1 sq. Cm iron is equivalent to ________ kgs.

(A) 0.685
(B) 0.765
(C) 0.785
(D) 0.875

இரும்புக் கம்பிகளின் எடை ஒரு சதுர செ.மீ.–க்கு ———— கிலோ வீதம் கணக்கிடப்படுகிறது.

(A) 0.685
(B) 0.765
(C) 0.785
(D) 0.875

42. A period of ______ days required for tender inviting notice for value of works above 2 Crores

(A) 7 days
(B) 15 days
(C) 21 days
(D) 30 days

ரூ. 2 கோடிக்கு மேற்பட்ட ஒப்பந்தபுள்ளி வரவேற்பு அறிவிப்பிற்கு அளிக்கப்படும் கால அவகாசம்

(A) 7 நாட்கள்
(B) 15 நாட்கள்
(C) 21 நாட்கள்
(D) 30 நாட்கள்

43. The stock of cement for three months reduces the strength of concrete by _______ %

(A) 20%
(B) 30%
(C) 40%
(D) 50%

மூன்று மாத சிமெண்ட் இருப்பினால் ————% கான்கிரிட்டின் பலம் குறையும்.

(A) 20%
(B) 30%
(C) 40%
(D) 50%

44. 1 : 2 : 4 cement concrete means

(A) 1 parts of cement : 2 parts of sand : 4 Parts of gravel
(B) 1 parts of cement : 2 parts of gravel : 4 Parts of sand
(C) 1 parts of sand : 2 parts of cement : 4 Parts of gravel
(D) 1 parts of gravel : 2 parts of sand : 4 Parts of cement

1 : 2 : 4 சிமெண்ட் கான்கிரிட் என்பது

(A) 1 பாகம் சிமெண்ட் : 2 பாகம் மணல் : 4 பாகம் கற்கள்
(B) 1 பாகம் சிமெண்ட் : 2 பாகம் கற்கள்: 4 பாகம் மணல்
(C) 1 பாகம் மணல் : 2 பாகம் சிமெண்ட் : 4 பாகம் கற்கள்
(D) 1 பாகம் கற்கள் : 2 பாகம் மணல் : 4 பாகம் சிமெண்ட்

45. The Construction of partition wall in a civil work was measured in units of ______

(A) Cubic Metre (B) Square Feet

(C) Metre (D) Square Metre

தடுப்புச்சுவர் எழுப்பப்படும் போது கட்டுமானப் பணிக்கான அளவீடு கீழ்கண்டவாறு கணக்கிடப்படும்.

(A) கன மீட்டர் (B) சதுர அடி

(C) மீட்டர் (D) சதுர மீட்டர்

46. One Acre is equal to __________.

(A) 42000 Sq. Feet (B) 42560 Sq. Feet

(C) 43560 Sq. Feet (D) 44000 Sq. Feet

ஒரு ஏக்கர் என்பது

(A) 42000 சதுர அடி (B) 42560 சதுர அடி

(C) 43560 சதுர அடி (D) 44000 சதுர அடி

47. One kilowatt hour is equal to ________.

(A) 100 Watt Hours (B) 980 Watt Hours

(C) 1000 Watt Hours (D) 1120 Watt Hours

ஒரு கிலோவாட் ஹவர் என்பது

(A) 100 வாட் ஹவர் (B) 980 வாட் ஹவர்

(C) 1000 வாட் ஹவர் (D) 1120 வாட் ஹவர்

48. PCC Work means

(A) Pure Cement and Concrete Work

(B) Partial Cement Concrete Work

(C) Plain Cement Concrete Work

(D) Pure Concrete Cement Work

PCC வேலை என்பது

(A) பியூர் சிமெண்ட் அண்டு கான்கிரிட் ஒர்க்

(B) பார்ஷியல் சிமெண்ட் அண்டு கான்கிரிட் ஒர்க்

(C) பிளெய்ன்சிமெண்ட் அண்டு கான்கிரிட் ஒர்க்

(D) பியூர் கான்கிரிட் சிமெண்ட் ஒர்க்

49. Tender must be submitted in ________.

(A) Sealed Cover (B) Unsealed Cover

(C) Ordinary Cover (D) Postage Cover

டெண்டர் —————— ல் வழங்கப்படவேண்டும்.

(A) மூடி முத்திரையிடப்பட்ட உறையில் (B) மூடி முத்திரையிடப்படாத உறையில்

(C) சாதாரண உறையில் (D) தபால் உறையில்

50. ________ shall be prepared and got approved at the end of each work.

(A) Completion Report (B) Progress Report

(C) Technical Report (D) Wages Report

ஒவ்வொரு வேலையின் முடிவில் ________ தயாரித்து ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

(A) முடிவறிக்கை (B) முன்னேற்ற அறிக்கை

(C) தொழில் நுட்ப அறிக்கை (D) சம்பள அறிக்கை

51. A register of works will be maintained in From No. ________.

(A) 94 (B) 95

(C) 96 (D) 97

படிவம் ________ ல் வேலைகள் குறித்தான பதிவேடு பேணப்படவேண்டும்.

(A) 94 (B) 95

(C) 96 (D) 97

52. Estimates for works will be drawn up in the From No. ________.

(A) 88 (B) 89

(C) 90 (D) 91

படிவம் ________ல் வேலைக்கான மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும்.

(A) 88 (B) 89

(C) 90 (D) 91

53. One Cubic feet is equivalent to

(A) 2.75 Litre (B) 27.50 Litre

(C) 28.31 Litre (D) 2.85 Litre

ஒரு கன அடி என்பது ________ ஆகும்.

(A) 2.75 லிட்டர் (B) 27.50 லிட்டர்

(C) 28.31 லிட்டர் (D) 2.85 லிட்டர்

54. The % of Income Tax to be dedicated from the value of work done by the Individual contractor who doesn't have PAN is

(A) 1% (B) 2%

(C) 10% (D) 20%

நிரந்திர கணக்கு எண் கொண்டிராத ஒப்பந்தகாரரிடம் (தனிநபர்) வேலையின் மதிப்பின் மீது பிடித்தம் செய்யப்படவேண்டிய வருமான வரி வீதம்

(A) 1% (B) 2%

(C) 10% (D) 20%

55. For works up to 2 crores, the duration to be given for second tender invitation is

(A) 7 days (B) 10 days

(C) 15 days (D) 21 days

ரூபாய் இரண்டு கோடி வரையிலான பணிகளுக்கு இரண்டாம் ஒப்பந்தபுள்ளி அழைப்பிற்கு அளிக்கவேண்டிய கால அவகாசம்

(A) 7 நாட்கள் (B) 10 நாட்கள்

(C) 15 நாட்கள் (D) 21 நாட்கள்

56. Is it possible for a contractor to cancel the work order on his own?

(A) Yes

(B) No

(C) After Completion of 50% work

(D) Within 2 months from receipt of work order

ஒப்பந்தகாரர் தானாக வேலையை இரத்து செய்ய இயலுமா?

(A) முடியும்

(B) முடியாது

(C) 50% வேலையை முடித்த பின்பு

(D) பணி ஆணை பெறப்பட்ட இரண்டு மாதங்களுக்கு உள்ளாக

57. The multiplying factor to convert Square Feet to Sq. Metre is ________.

(A) 0.629 (B) 0.729

(C) 0.289 (D) 0.929

சதுர அடியில் இருந்து சதுர மீட்டராக மாற்றுவதற்கு எதனால் பெருக்க வேண்டும்?

(A) 0.629 (B) 0.729

(C) 0.289 (D) 0.929

58. The amount of ceiling for tender advertisement in daily newspaper is

(A) Above Rs. 10,000 (B) Above Rs. 20,000

(C) Above Rs. 50,000 (D) Above Rs. 1,00,000

ஒப்பந்தப்புள்ளியினை தினசரி செய்தித்தாளில் விளம்பரப்படுத்த இந்தத் தொகைக்கு மேற்படல் வேண்டும்

(A) ரூ. 10,000-க்கு மேல் (B) ரூ. 20,000-க்கு மேல்

(C) ரூ. 50,000-க்கு மேல் (D) ரூ. 1,00,000-க்கு மேல்

59. The technical authority to sanction the value of work for Rs. 40,00,000 is ________.

(A) Divisional Executive Engineer

(B) Assistant Divisional Executive Engineer

(C) Assistant Engineer

(D) Superintending Engineer

ரூ. 40,00,000-க்கு உரிய வேலைக்கான தொழில்நுட்ப அனுமதி யாரால் வழங்கப்படலாம்?

(A) கோட்டப் பொறியாளர்

(B) உதவி கோட்டப் பொறியாளர்

(C) உதவி பொறியாளர்

(D) மேற்பார்வை பொறியாளர்

60. The administrative approval authority to sanction donor works above Rs. 20,00,000 is

(A) Government

(B) Commissioner

(C) Joint Commissioner

(D) Not Necessary

ரூ. 20,00,000-க்கு மேற்பட்ட உபயதாரர் வேலைக்கான நிர்வாக அனுமதி வழங்குபவர்

(A) அரசு

(B) ஆணையர்

(C) இணை ஆணையர்

(D) தேவையில்லை

61. When can the Earnest Money Deposit be refunded?

(A) After 3 months

(B) After one year

(C) After completion of work

(D) After completion of audit

பண பிணைவைப்புத் தொகை எப்பொழுது திரும்ப வழங்கப்படலாம்?

(A) மூன்று மாதத்திற்குப் பிறகு

(B) ஒரு வருடத்திற்குப் பிறகு

(C) வேலை முடிந்த பிறகு

(D) இதற்கான தணிக்கை முடிந்த பிறகு

62. Apart from Departmental Audit for Thiruppani accounts, Accountant General Audit is necessary to audit ________.

(A) Public donations

(B) Temple General Funds

(C) Commissioner Common Good Fund

(D) Government Grants

திருப்பணிக் கணக்குகளின் மீதான துறைத் தணிக்கை முடிந்தாலும் மாநில கணக்காயரின் தணிக்கை இதற்காக தேவை

(A) பொது மக்கள் நன்கொடை

(B) திருக்கோவில் பொது நிதி

(C) ஆணையர் பொதுநல நிதி

(D) அரசு மானியத் தொகை

63. Part Payment means ________.

(A) Advance to the contractor

(B) Part Payment to purchase materials

(C) Part payment to labourers

(D) Payment made to party done work

பகுதி பட்டுவாடா என்பது —————————.

(A) ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்ட முன்பணம்

(B) பொருட்கள் கொள்முதல் செய்ய பகுதித்தொகை வழங்கியது

(C) வேலை ஆட்களுக்கு பகுதித்தொகை வழங்கியது

(D) ஒரு பகுதி முடிக்கப்பட்ட வேலைக்கு வழங்கும் தொகை

64. The Eligible Contractor should be an Income Tax Payer for ________.

(A) 1 year

(B) 3 years and above

(C) 5 years and above

(D) No such period

ஒப்பந்தக்காரர் எத்தனை ஆண்டிற்கு வருமான வரி செலுத்தியவராக இருத்தல் வேண்டும்?

(A) ஓராண்டு

(B) மூன்று ஆண்டுகளுக்கு மேலாக

(C) ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக

(D) காலம் ஏதும் தேவையில்லை

65. After completion of Thiruppani works, the sale of closing stock through public auction is conducted by

(A) Executive officer

(B) Joint Commissioner

(C) Commissioner

(D) Thiruppani Committee

திருப்பணி வேலை முடிந்த பின் முடிவு இருப்புகள் யாரால் பொது ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்?

(A) செயல் அலுவலரால்

(B) இணை ஆணையரால்

(C) ஆணையரால்

(D) திருப்பணி குழுவினரால்

66. After completion of Thiruppani works, the sale of closing bank balance in Thiruppani accounts is transformed to ________.

(A) Thiruppani of other temples

(B) Commissioner Common Good Fund

(C) General Account of that temple

(D) Separate Investment in Thiruppani A/c

திருப்பணி வேலைகள் அனைத்தும் முடிவுற்ற பின் முடிவு வங்கியிருப்பு எதில் மாற்றம் செய்யப்படலாம்

(A) பிற கோவில் திருப்பணிகளுக்கு

(B) ஆணையர் பொது நல நிதிக்கு

(C) திருக்கோவில் பொதுக் கணக்கிற்கு

(D) திருப்பணிக் கணக்கில் தனியே முதலீடு

67. The sanctioned authority for Mutt Temple Thiruppani is ________.

(A) Government (B) Commissioner

(C) Regional Joint Commissioner (D) Head of the Mutt

மடம் சார்ந்த திருக்கோவிலின் திருப்பணிக்கு அனுமதி வழங்குவது யார்?

(A) அரசு (B) ஆணையர்

(C) ஆளுகைக்கு உட்பட்ட இணை ஆணையர் (D) மடத்தின் தலைவர்

68. The accounting procedure for gold received at the time of Thiruppani Hundial opening

(A) To be registered in the inventory register and kept under safe custody

(B) To be sold and the amount to be created in Thiruppani Account

(C) Can be melted and new ornaments are made

(D) Used for honouring the Thiruppani Committee

திருப்பணி உண்டியல் திறப்பின் போது பெறப்பட்ட தங்கத்தின் நிலை

(A) நகைகள் இருப்புப் பதிவேட்டில் பதிந்து பாதுகாப்பாக வைத்தல்

(B) விற்பனை செய்து அதற்கான தொகையை திருப்பணிக் கணக்கில் வைத்தல்

(C) அதனை உருக்கி புதிய நகை செய்தல்

(D) திருப்பணி குழுவினருக்கு மரியாதை செய்ய பயன்படுத்துதல்

69. The medical expenses for accidents met by a labourer during construction

(A) Paid from the temple funds

(B) To be admitted in ESI Hospital

(C) Borne by the contractor

(D) Own Liability of the labourer

கட்டுமானப் பணியில் ஈடுபட்டுள்ள தொழிலாளி ஒருவருக்கு எதிர்பாராத விதமாக ஏற்பட்ட விபத்துக்குண்டான செலவுகளுக்கு

(A) திருக்கோவில் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்

(B) இ.எஸ்.ஐ மருத்துவமனையில் சேர்க்கப்படவேண்டும்

(C) ஒப்பந்தகாரர் செலவுகளுக்கு பொறுப்பேற்றல்

(D) தொழிலாளியின் தனிபொறுப்பு

70. How many bags of cement is equivalent to 1 Metric Tonne?

(A) 20 Bags
(B) 50 Bags
(C) 100 Bags
(D) 110 Bags

ஒரு மெட்ரிக் டன்னுக்கு எத்தனை சிமெண்ட் மூட்டைகள்?

(A) 20 மூட்டைகள்
(B) 50 மூட்டைகள்
(C) 100 மூட்டைகள்
(D) 110 மூட்டைகள்

71. Generally, the height of the compound wall is

(A) 5.5 Feet
(B) 6 Feet
(C) 7 Feet
(D) As decided by Thiruppani Committee

பொதுவாக சுற்றுச்சுவரின் நிர்ணயிக்கப்பட்ட உயரம்

(A) 5.5 அடி
(B) 6 அடி
(C) 7 அடி
(D) திருப்பணிக்கமிட்டியின் முடிவு

72. The construction materials supplied by the Executive Officer of the temple

(A) Materials cannot be supplied
(B) Can be received in cash from the contractor for the supplied materials
(C) Cost of materials can be shown in General Account
(D) Cost of material is deducted while making payment to the contractor

கட்டுமானப் பொருட்கள் திருக்கோவில் செயல் அலுவலரால் வழங்கப்பட்டது

(A) கட்டுமானப் பொருட்கள் வழங்க இயலாது
(B) ஒப்பந்தகாரரிடம் ரொக்கமாக பெற்றுக்கொள்ளலாம்
(C) பொருட்களின் மதிப்பினை பொதுக்கணக்கில் செலவெழுதலாம்
(D) ஒப்பந்தகாரரிடமிருந்து பிடித்தம் செய்யப்படவேண்டும்

73. The amount due from the contractor to the Department will be recovered under

(A) Revenue Recovery Act
(B) HR and CE Act
(C) Contractor's Registration Act
(D) Labour Welfare Act

ஒப்பந்தகாரரிடமிருந்து வசூலிக்க வேண்டிய தொகைகளை கீழ்கண்ட எந்த தமிழ்நாடு அரசு சட்டத்தின் வாயிலாக வசூலிக்க இயலும்

(A) வருவாய் வசூல் சட்டம்
(B) இந்து சமய அறநிலையச் சட்டம்
(C) ஒப்பந்தகாரர்கள் பதிவுச் சட்டம்
(D) தொழிலாளர் நலச் சட்டம்

74. For work estimate of more than Rs. ________ Crores, tender invitations should be published in Indian Trade Journals.

(A) 10 (B) 25

(C) 50 (D) 100

ரூ. ———————— கோடி மதிப்பீட்டிற்கு மேலான கட்டுமான பணிகளின் ஒப்பந்தப்புள்ளி விளம்பரங்களை இந்திய வணிக நாளிதழில் வெளியிடப்படவேண்டும்.

(A) 10 (B) 25

(C) 50 (D) 100

75. For work estimate of more than Rs. ________ Lakhs, tender invitations should be published through Joint Director, Information and Public Relations, Chennai.

(A) 5 (B) 10

(C) 20 (D) 25

ரூ. ———————— இலட்சம் மதிப்பீட்டிற்கு மேலான கட்டுமான பணிகளின் ஒப்பந்தப்புள்ளி விளம்பரங்களை சென்னை செய்தி மற்றும் மக்கள் தொடர்பு இணை இயக்குநர் மூலமாக வெளியிடப்படவேண்டும்.

(A) 5 (B) 10

(C) 20 (D) 25

76. The authority to extend the due date and time of receiving tenders.

(A) Extension not possible (B) Tender Inviting officer

(C) Contractor's team (D) Commissioner

ஒப்பந்தப் புள்ளிகளை பெறுவதற்கான கடைசி நாள் மற்றும் நேரத்தை நீட்டிக்கும் அதிகாரம் படைத்தவர்

(A) நீட்டிக்க இயலாது (B) ஒப்பந்தப்புள்ளி வரவேற்கும் அதிகாரி

(C) ஒப்பந்தகாரர்கள் குழு (D) ஆணையர்

77. In a tender document, if three is variation in numbers and words for the specified rate

(A) The tender should be rejected

(B) The least should be considered

(C) The highest should be considered

(D) Average should be taken

ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தில் எண்ணாலும் எழுத்தாலும் குறிப்பிட்ட விலைகளுக்கிடையே முரண்பாடுகள் இருக்குமாயின்

(A) ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்படவேண்டும்

(B) இரண்டிலும் குறைவானதை மட்டுமே பரிசீலிக்கவேண்டும்

(C) இரண்டிலும் அதிகமானதை மட்டுமே பரிசீலிக்கவேண்டும்

(D) சராசரியை எடுத்துக்கொள்ளவேண்டும்

78. With held amount means

(A) Unused amount in bank

(B) Closing balance of Thiruppani accounts

(C) Amount provided in Plan and Estimate

(D) Amount deducted from the contractor

நிறுத்தி வைக்கப்பட்ட தொகை என்பது

(A) பயன்படுத்தப்படாத வங்கியிருப்பு

(B) திருப்பணி கணக்கின் முடிவு இருப்பு

(C) திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கப்படும் தொகை

(D) ஒப்பந்தகாரரிடம் பிடித்தத்தொகை

79. ________% for escalation rates on works may be provided in the estimate.

(A) 1% (B) 5%

(C) 10% (D) 13%

மதிப்பீட்டில் ———————— % பொருட்களின் விலையேற்றத்திற்காக ஒதுக்கப்படவேண்டும்.

(A) 1% (B) 5%

(C) 10% (D) 13%

80. The % Earnest Money Deposit from the estimate to be collected from the contractor during tender.

(A) 1% (B) 2%

(C) 2.5% (D) 5%

டெண்டரின்போது ஒப்பந்ததாரரிடமிருந்து மதிப்பீட்டுத் தொகையில் வசூல் செய்யவேண்டிய பிணை பணயத் தொகையின் சதவீதம்

(A) 1% (B) 2%

(C) 2.5% (D) 5%

TC - 146

**060/DM/19**

| *Register Number* | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS

## DEPARTMENTAL TEST FOR APPOINTMENT AS ASSISTANT AUDIT OFFICERS IN THE AUDIT WING OF THE HINDU RELIGIOUS AND CHARITABLE ENDOWMENTS (ADMN.) DEPARTMENT – PART - II (b) ACCOUNTS AND AUDIT OF TIRUPPANI WORKS FOR RELIGIOUS INSTITUTIONS AND GENERAL ACCOUNTS OF GOVERNMENT OF TAMIL NADU (THEORY AND PRACTICAL)

(With Books)

Maximum Time : 30 minutes　　　　Maximum Marks : 20

***<u>IMPORTANT INSTRUCTIONS</u>***

## DESCRIPTIVE TYPE

விரிவான விடையளிக்கும் வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

1. Answers in excess of the prescribed number of questions appearing at the end of the answer book will not be valued.

   விடைகளை குறிப்பிட்டுள்ள எண்ணிக்கைக்கு அதிகமாக எழுதியிருப்பின், விடைத்தாளின் இறுதியில் உள்ள அதிக எண்ணிக்கையிலான விடைகள் மதிப்பீடு செய்யப்படாது.

2. Answer should be in brief and to the point and need not be a verbatim reproduction of printed pages. (Applicable for tests to be answered "with books" only).

   விடைகள் சுருக்கமாகவும், வினாவிற்கு உரிய அளவிலும் இருக்க வேண்டும். புத்தகத்தில் உள்ளவற்றை அப்படியே வார்த்தைக்கு வார்த்தை திரும்ப எழுதக் கூடாது. (இக்குறிப்பு புத்தகங்களுடன் எழுதும் தேர்விற்கு மட்டும் பொருந்தும்)

3. In case of doubt, English version is the final.

   வினாக்களில் சந்தேகமிருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

**[Turn over**

**Answer any FOUR of the following.**

எவையேனும் நான்கு கேள்விகளுக்கு விடையளிக்கவும். **(4 × 5 = 20)**

1. List out the particulars to be furnished by the contractor in respect of technical personnel employed (along with the agreement).

   தொழிற்நுட்ப பணியாளர்களின் நியமனம் குறித்து ஒப்பந்தகாரரால் ஒப்பந்தப் பத்திரத்துடன் சமர்பிக்க வேண்டிய விபரங்கள் குறித்து எழுதுக.

2. Distinguish between Supplemental Estimate and Revised Estimate.

   துணை மதிப்பீடு மற்றும் திருத்திய மதிப்பீடு – வேறுபடுத்திக்காட்டவும்.

3. Mention the different types of Contract Systems.

   ஒப்பந்தப்புள்ளிகளின் வகைகள் குறித்து குறிப்பிடுக.

4. Mention any five Works that are to be Pre measured.

   முன் அளவுகள் செய்யப்படவேண்டிய ஏதேனும் ஐந்து வேலைகளை குறிப்பிடுக.

5. Prepare a receipt and charges statement of the Tiruppani committee with the following Particulars :

| Opening balance | Rs. |
|---|---|
| Cash | 7525.00 |
| Bank | 300000.00 |
| Donations collected | 200000.00 |
| Tiruppani Hundial Collections | 65500.00 |
| Remittance made in Bank | 270000.00 |
| Withdrawal from Bank | 5000.00 |
| Purchase of Gold (cheque) | 370000.00 |
| Hundial opening expenditure (cash) | 3000.00 |
| Bank interest credited in passbook | 2700.00 |

திருப்பணிக்குழுவின் வரவு செலவு கணக்கினை கீழ்காணும் விவரங்களைக் கொண்டு தயாரிக்கவும்.

| ஆரம்ப இருப்பு | ரூ. |
|---|---|
| ரொக்கம் | 7525.00 |
| வங்கி | 300000.00 |
| நன்கொடை வரவு | 200000.00 |
| திருப்பணி உண்டியல் வரவு | 65500.00 |
| வங்கிக் கணக்கில் இருசால் | 270000.00 |
| வங்கியில் தொகை எடுத்தல் | 5000.00 |
| தங்கம் கொள்முதல் (காசோலை) | 370000.00 |
| உண்டியல் திறப்பு செலவு | 3000.00 |
| பாஸ்புத்தகத்தில் வங்கி வட்டி வரவு வைத்தது | 2700.00 |

6. Draw a Bank Reconciliation Statement from the following particulars :

| | | |
|---|---|---|
| (a) | Bank balance as on 31.12.2015 as per Cash Book | Rs. 4,99,900.00 |
| (b) | Interest credited in pass book, not taken credit in cashbook | Rs. 2,530.00 |
| (c) | Donar cheque received (12.12.15) but not credited in Passbook | Rs. 7,000.00 |
| (d) | Cheque issued to contractor (27.12.15) but not encashed | Rs. 2,30,000.00 |
| (e) | Bank commission debited in Passbook but not in cashbook | Rs. 40.00 |

கீழ்கண்ட விபரங்களைக் கொண்டு வங்கி இறுதி ஒத்திசைவினை கணக்கிடுக.

| | | |
|---|---|---|
| (அ) | 31.12.2015–ல் ரொக்கக்குறிப்பு படியான வங்கி இறுதிதொகை | ரூ. 4,99,900.00 |
| (ஆ) | வங்கி வட்டி பாஸ் புத்தகத்தில் வரவு வைக்கப்பட்டது. ரொக்கக்குறிப்பில் வரவு வைக்கப்படவில்லை | ரூ. 2,530.00 |
| (இ) | நன்கொடையாக காசோலை வரப்பெற்றது (12.12.15) வங்கி பாஸ் புத்தகத்தில் வரவு வைக்கப்படவில்லை | ரூ. 7,000.00 |
| (ஈ) | ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்ட காசோலை (27.12.15) காசாக்கப்படவில்லை | ரூ. 2,30,000.00 |
| (உ) | வங்கிக்கழிவு பாஸ் புத்தகத்தில் கழிக்கப்பட்டது ரொக்கக் குறிப்பில் கழிக்கப்படவில்லை | ரூ. 40.00 |